# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 01 திங்கட்கிழமை 16.12.2024 கதிர் 82



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# இந்தியாவில் அனுரவுக்கு செங்கம்பள வரவேற்பு!

**இந்தியாவுக்கான உத்தி தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசா நாயகாவுக்கு இந்தியப் பிர தமர் நரேந்திர மோடி மகத்தான வரவேற்பளித்துள்ளார்.**

இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற அனுரகுமார திசாநாயகா தனது முதலாவது வெளிநாட்டுப் பயண-



மாக நேற்று இந்தியாவுக்குச் சென்றிருந்-தார். அவரை இன்று காலை டில்லியில் அமைந்துள்ள இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான ராஷ்டிர பதி பவனில் வைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்.

இன்று காலை, ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதிக்குச் செங்கம்பள வரவேற்பளி-க்கப்பட்டது. முப்படையினரின் அணுவகுப்பு மரியாதையுடன், மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு ஜனாதிபதி வரவேற் கப்பட்டார்.

6 ▶

## எதிர்கட்சி சார்பில் ஒருவரை முன்மொழியத் தீர்மானம்!

(கொழும்பு, டிச. 16)

நாளை நாடாளுமன்றத்தில் நடை-பெறவுள்ள சபாநாயகர் தெரிவின் போது எதிர்க்கட்சிகளின் சார்பில் சபாநாயகர் ஒருவரை முன்மொழிவதற்கும் திட்டம-ிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் சபாநாயகர் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினீ குமாரி விஜேரத்னவ-ின் பெயர் முன்மொழியப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-04)

## புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன?

(கொழும்பு, டிச. 16)

பத்தாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது சபாநாயகராக நாடா-ளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ஜகத் விக்கிரமரத்னவை முன்மொழிவதற்குத் தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது, கடந்த மாதம் 21 ஆம் திகதி கூடிய பத்தாவது நாடா ளுமன்ற அமர்வின் போது சபாநாயகராக நிய மிக்கப்பட்ட அசோக ரன்வல பதவி

6 ▶

## வைத்தியசாலை வழக்கில் அர்ச்சுனாவுக்குப் பிணை!

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையினுள் அத்துமீறி உள்நுழைந்து அரச உத்தியோகத்தர்களின் பணிக்கு இடையூறாகச் செயற்பட்டார்கள் என்று வைத் தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த. சத்தியமூர்த்தி முறைப்பாடு செய்த வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் இ. அர்ச்சுனா மற்றும் அவரது செயலாளர் சட்டத்தரணி என். கௌசல்யா ஆகியோரைத்

6 ▶

## நீதி அமைச்சர் சி.ஐ.டி யில் முறைப்பாடு!

(கொழும்பு, டிச. 16)

நீதி மற்றும் தேசிய ஒரு மைப்பாட்டு அமைச்சர் சட்டத்-தரணிஹர்ஷணநாணயக்கார இன்று காலை குற்றப் புல-னாய்வு திணைக்களத்துக்கு நேரில் சென்று முறைப்பாடு ஒன்றைப் பதிவு

6 ▶

## இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இலங்கையைப் பயன்படுத்த இடமில்லை!

### -இந்தியாவில் வைத்து ஜனாதிபதி அனுரகுமார திட்டவிட்டம்-

இந்தியாவின் பாதுகாப்புக்கும், பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கையைப் பயன் படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவ-தில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரி வித்துள்ளார்.

இந்தியாவுக்கு மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் கலந்து கொண்ட கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இன்று நடை-பெற்றது.

அந்தச் சந்திப்பில் உரையாற்றிய போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, தனது இந்திய விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்த உதவும் என்று குறி-ப்பிட்டதுடன், இந்தியப் பிரதமரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அழைப்பு விடுத்ததாகவும் தெரிவி-க்கப்படுகின்றது.

அவர் அங்கு உரையாற்றிய போது

மேலும் தெரிவிக்கையில், இரண்டு வருட-ங்களுக்கு முன்னர் இலங்கை கடுமையான பெ-ாருளாதார நெருக்கடியை எதிர்கொண்டதாகவும், அந்த நிலையில் இருந்து மீள்வதற்கு இந்தியா



பெரும் ஆதரவை வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

பொதுச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதில் இந்தியா பெரும் வெற்றியைப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, இலங்கையும் அதே பாதையில் செல்வதாகவும், இலங்ரைகயின் அந்த முயற்சிக்கு ஆதரவளிப்ப-தாக இந்தியப் பிரதமர் உறுதியளித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், இரு நாடுகளுக்கும் பெரும் பிரச்சிலை-னயாக உருவாகியுள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமானதும், நிலையா-னதுமான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்ததுடன், அதனை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு

இந்திய பிரதமரிடம் ஜனாதிபதி கோரிக்கை ஒன்றையும் முன்வைத்தார். (ஐ)

## இன்று அல்லது நாளை புதிய தாழமுக்கம்?

கொழும்பு, டிச. 16

இன்று திங்கட் கிழமை அல்லது நாளை தென்கி ழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புக்கு மேலாக தாழமுக்க மண்டல மொன்று உருவாக வாய்ப்புள்ளதோடு, அது மெதுவாக வலுவடைந்து மேற்கு - வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து, எதிர்வரும் 2 நாட்களில் இலங்கை-கயின் வட பகுதியை அண் மித்ததாக, தமிழகக் கரை-ரயை நோக்கி நகரக் கூடும் என எதிர்பார்க்கப்படுவ-தாக, வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில்

விசேடமாக நாட்டின் வடக்கு, கிழக்கு மாகா-ணங்களில் வசிக்கும் பொதுமக்கள் வளிமண்ட லவியல் திணைக்களத்-தினால் வெளியிடப்படும் எதிர்கால முன்னறிவிப்பு-கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளார்கள்.

6 ▶

# பஸ் மோதி தந்தை மரணம் மகன் வைத்தியசாலையில்!

## - இளவாலையில் துயரம் -

(தெல்லிப்பளை, டிச. 16)

யாழ்ப்பாணத்தில் இரவு நேரம் வீதியோரமாக இருந்த வயோதிபரை பஸ் மோதியதில் அந்த நபர் உயிரிழந்துள்ளதுடன், அவரது மகன் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஆதார சேர்க்கப்பட்டுள்ளார்.

பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய, மோஷஸ் பாக்கியநாதன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

பெரியவிளான் பற்றிமா தேவாலயத்துக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில் உயிரிழந்தவரும், அவரது மகனும் வீதியோரமாக இருந்துள்ளனர்.

அவ்வேளை வீதியில் பயணித்த பஸ் இருவரையும் மோதியுள்ளது. அதில் காயமடைந்த இருவரையும் அயலவர்கள் மீட்டுத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், தந்தை உயிரிழந்துள்ளார். மகன் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தையடுத்து பஸ் சாரதி பஸ்ஸை விபத்து நடைபெற்ற இடத்தில் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-04)

# சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் நடமாடும் சேவை கைதடியில் ஆரம்பம் !

யாழ்ப்பாணம், டிச. 16

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையானது வடமாகாண சுற்றுலா பணியகத்துடன் இணைந்து சுற்றுலாத்துறை தொடர்புடைய சேவை வழங்குநர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் நடமாடும் சேவை இன்று கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சுற்றுலா பணியக அலுவலகத்தில் ஆரம்பமானது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கொழும்பு அலுவலகத்தில் இருந்து வருகைதந்துள்ள உதவி பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் துறைசார் பதிவுகளுக்கான உதவிகள் மற்றும் வழிகாட்டல் சேவையில் ஈடுபட்டுள்ளனதுடன் கள விஜயங்களை மேற்கொண்டு பதிவுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கிவருகின்றனர்.

இந்த நடமாடும் சேவை மூலம் சுற்றுலாத்துறை தொடர்புடைய சேவை வழங்குநர்கள் தமது வியாபார நிறுவனங்களை பதிவு செய்துகொள்ளமுடியும். அது மட்டுமல்லாது தமது சந்தேகங்கள் மற்றும் சேவைகளை பெறுவதுடன் கொழும்பு சென்று வரும் நேர மற்றும் பணவிரயத்தையும் தவிர்த்துக்கொள்ள முடியும் என வடமாகாண சுற்றுலா பணியகதின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நாளையும் இந்த சேவையை காலை ஒன்பது மணிமுதல் பெற முடியுமென அறியமுடிகிறது.

# டிசம்பர் 22 இல் ரணில் இந்தியாவுக்கு விஜயம்



கொழும்பு, டிச. 16

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22 ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

ஒரு வாரகாலம் இந்தியாவில் தங்கியிருந்து முக்கியத்துவமிக்க சந்திப்புகளில் அவர் ஈடுபடவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதியும் ரணில் டில்லிக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-04)

# முட்டை விலையில் வீழ்ச்சி



(யாழ்ப்பாணம், டிச. 16)

தற்போது சந்தையில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும். சந்தையில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்திருந்தாலும் பண்டிகை காலங்களில் முட்டையின் விலை அதிகரிக்கும் சாத்தியம் நிலவுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், இன்றையதினம், முட்டை ஒன்று 30 ரூபாய் முதல் 35 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்தநிலையில், முட்டையின் விலை வீழ்ச்சியடைந்திருந்தாலும், சந்தையில் கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சந்தையில் கோழி இறைச்சி ஒரு கிலோ கிராம் 900 ரூபாய் முதல் 1,200 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. (ஜ)

# புலமைப்பரிசில் வழக்கு இன்று மீள விசாரணை!

(கொழும்பு, டிச. 16)

இம்முறை நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் 3 வினாக்கள் வெளியான நிலையில், மீண்டும் பரீட்சையை நடத்த உத்தரவிடுமாறு கோரி, பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களால் தாக்கல் செய்யப்பட்ட நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.


யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளில் 3 வினாக்களுக்கும் இலவச புள்ளிகள் வழங்க தீர்மானித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் முழு கவனம் செலுத்தியுள்ளதாக மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் புலமைப்பரிசில் பரீட்சை மிகவும் முக்கியமான பரீட்சை எனவும், பரீட்சையில் வழங்கப்படும் ஒவ்வொரு சித்தியும் மிகவும் முக்கியமானது எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதியின் சட்டத்தரணி, கிராமப்புற மாணவர்கள் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கு இதுவே ஒரே வழி எனவும் குறிப்பிட்டார்.

எனவே, இந்தத் பரீட்சையில் ஏதேனும் அநீதி நடந்தால், அது ஒட்டுமொத்த மாணவர் சமுதாயத்துக்கும் பாதகமான விளைவை ஏற்படுத்தும் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார். (ஜ - 09)

# விபத்தில் மாணவி மரணம்!



கண்டி, டிச 16

கண்டி, வில்லியம் கோபல்லவ மாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் உயர்தர மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிள் ஒன்று தனியார் பஸ் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் பயணித்த உயர்தர மாணவி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கண்டி, கெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய உயர்தர மாணவியே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற உயர்தர மாணவியின் தந்தைக்கு எந்த வித காயங்களும் ஏற்படவில்லை என்றும் ஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-04)

# அனைத்துப் பல்கலைக்கழக மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மொரட்டுவ, ஜே'புர அணிகள் ஆண், பெண் பிரிவுகளில் சம்பியன்!









(யாழ்ப்பாணம், டிச. 16).

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பொன்விழா நிகழ்வுகளின் வரிசையில் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் நடாத்தப்பட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில், இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டுச் சம்மேளன அங்கீகாரத்துடன் இடம்பெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக் கழகங்களினதும் ஆண், பெண் அணிகளுக்கிடையில் போட்டிகள் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர், எஸ்.மதிவாணன் மற்றும் பொது வைத்திய நிபுணி அனோஜா மதிவாணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டுச் சம்மேளனத் தலைவரும், இரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானங்கள் பீடாதிபதியுமான கலாநிதி மனோஜ் பெர்ணாண்டோ கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

போட்டிகள், கடந்த சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு அறிமுக நிகழ்வுடன் ஆரம்பமாகின. இறுதிப்போட்டி ஞாயிற்றுக் கிழமை பி.ப 02.30 மணிக்கு இடம்பெற்றது. ஆண்கள் பிரிவில், மொரட்டுவப் பல்கலைக்கழக அணி அதிக புள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, களனியப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டன.

பெண்கள் பிரிவில், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி அதிக புள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. மொரட்டுவ, கொழும்புப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொணடன. (ஜ-09)



# சுற்றுலாத்துறை ஒன்றியத்துக்கு புதிய நிர்வாக சபை தெரிவு!

யாழ்ப்பாணம், டிச. 16

வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடல் யாழ் நகரில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுற்றுலாவுடன் தொடர்புடைய வியாபாரங்களில் ஈடுபடும் உரிமையாளர்களின் கூட்டமைப்பான வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த புதன்கிழமை மாலை 05 மணியளவில் யாழ் நகரில் அமைந்துள்ள ஜெற்விங் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

இதன் போது இடம்பெற்ற நிர்வாகத் தெரிவில் வலம்புரி மற்றும் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியின் உரிமையாளர் தி.ஜெகசீலன் தலைவராகவும் டி வில்லா உரிமையாளர் ஏ.டிலான் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம், வடமாகாணத்தில் உள்ள சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலாத்துறையோடு தொடர்புபட்ட ஏனைய அமைப்புகளையும் இணைத்து செயற்படுகின்ற ஒரு பொது அமைப்பாகும். வடமாகாண சுற்றுலாத் துறையினை வளமான சுற்றுலாத்துறையாக மேம்படுத்துவதுடன் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்வதும் இவர்களது பிரதான பணியாகும் என்பது குறிப்பிடத் தக்கதாகும்

# பெருந்தொகை பணத்துடன் சிக்கிய இளைஞர்கள்



*(கொழும்பு , டிச. 16).*

*கொழும்பு -வெள்ளவத்தையில் பெருந்தொகை பணத்துடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*கொலிங்வுட் பிளேஸ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது தெகிவளையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் சிக்கியுள்ளார்.*

*குறித்த இளைஞரிடம் இருந்து பெருந்தொகை பணம் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*தேடுதல் நடவடிக்கையின் போது போதைப்பொருள் மற்றும் 19 இலட்சம் ரூபா பணம், மொபைல் போன், பணம் எண்ணும் இயந்திரம், இரண்டு வங்கி அட்டைகள் மற்றும் ஒரு மின்னணு தராசு என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.*

*இதனையடுத்து சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணைக்கு அமைய போதைப்பொருளுடன் மேலும் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கொழும்பு, மட்டக்களப்பு பகுதிகளை சேர்ந்த 25 மற்றும் 24 வயதானவர் கைது செய்யப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைக்காக வெள்ள வத்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.*

*(ஐ)*

மாலைக்கதிர்
Maalaikkathir



# அமெரிக்க நிறுவனத்திடம் கையூட்டல் பெற்ற இந்திய அதிகாரிகள்!



இந்தியாவில் உயுடு, தெற்கு ரயில்வே ஒப்பந்தங்களைப் பெற, அதிகாரிகளுக்கு அமெரிக்க நிறுவனமான மூக் இங்க் 4.2 கோடி இலஞ்சம் கொடுத்தது என ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய ரயில்வேக்கு மோஷன் கண்ட்ரோல் சிஸ்டம் என்ற கருவியை விநியோகம் செய்யும் ஒப்பந்தத்தைப் பெற 2020ல் மூக் நிறுவனம் முயற்சி செய்தது.

2020-க்கு முன்பு வரை மத்திய ரயில்வேக்கு கருவியை விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் மூக் நிறுவனம் இல்லாத நிலையில் ஒப்பந்த தொகையில் 10மூ கமிஷன் தருவதாக இடைத்தரகர் மூலம் மூக் நிறுவனம் அந்த ஒப்பந்தத்தை கைப்பற்றி செப்டம்பர் 2020 இல் மத்திய ரயில்வே ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் சேர்ந்தது.

இதனைத்தொடர்ந்து நவம்பர் 2021 இல் உயுடு நிறுவனத்திடம் சுமார் 12 கோடி மதிப்புள்ள ஒப்பந்தத்தையும் மூக் இங்க் பெற்றது. இவைதொடர்பாக அமெரிக்க பங்கு வர்த்தக ஆணையத்தில் நடந்த வழக்கில் மூக் இங்க் நிறுவனம், இந்திய அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்ததை ஒப்புக்கொண்டது.

எனவே அந்நிறுவனத்துக்கு 14 கோடி அபராதம் விதிக்கப்பட்ட நிலையில் சட்ட நடவடிக்கையை தவிர்க்க அபராதத் தொகையை 3 மடங்காக ஜ 300 சதவீதம் அதிகம்ஸ மூக் இங்க் நிறுவனம் செலுத்தியுள்ளது

இதற்கிடையே பன்னாட்டு மென்பொருள் நிறுவனமான ஆரக்கள், இந்திய அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்ததாக தெரியவந்துள்ளது.

இந்தியா, ருயுநு மற்றும் துருக்கி நாட்டு அதிகாரிகளுக்கு ஆரக்கள் நிறுவனம் 57 கோடி இலஞ்சம் கொடுத்தது. இதை அந்நிறுவனம் ஒப்புக்கொண்டதால் அதற்கு 193 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

முன்னதாக அதானி நிறுவனம் இந்தியாவில் 2,000 கோடிக்கு மேல் இலஞ்சம் கொடுத்து ஒப்பந்தங்கள் பெற்றது தொடர்பாக சர்ச்சை ஏற்பட்ட நிலையில் தற்போது பிற பொதுத்துறை நிறுவனங்களும் அமெரிக்காவிடம் இலஞ்சம் பெற்றுள்ள சம்பவம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா’ மக்களவையில் தாக்கல் செய்யப்படுமா?



நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் கடந்த 4-ம் திகதி தொடங்கி இம்மாதம் 20-ம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது. குறித்த கூட்டம் தொடங்கியதில் இருந்தே அதானி விவகாரம், சம்பல் வன்முறை, மணிப்பூர் வன்முறை குறித்து அவையில் விவாதம் நடத்த வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டன.

இந்த வரிசையில், கடந்த 12-ம் திகதி ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அதன்படி இந்த மசோதா இன்று (டிசம்பர் 16) தாக்கல் செய்யப்படும் என்றுதகவல்கள்வெளியாகி இருந்த நிலையில், ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்படாது என்று தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி இந்த வார இறுதியில் மசோதாவை தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மக்களவையின் இன்றைய அலுவல் அட்டவணையில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா இடம்பெறவில்லை. எனினும், மக்களவை சபாநாயகர் அனுமதியுடன் கடைசி நேரத்தில் துணை பட்டியல் மூலம் இந்த மசோதாவை கொண்டுவரவும் வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# விரைவில் விண்ணில் ஏவப்படும் ஸ்பேஸ் எக்ஸ்’ விண்கலம்!

விண்வெளி ஆராய்ச்சியில் பல்வேறு அரிய சாதனைகளை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) படைத்து வருகிறது.

இந்நிலையில் அதனுடன் வணிக ரீதி யாகவும் வெளிநாட்டு செயற்கைக் கோள்களை விண்ணில் நிலைநிறுத்தி உலக சந்தையில் முன்னணி அமைப்பாக திகழ்கிறது. இதற்கிடையே எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு சந்திரயான்-4, ககன்யான் உட்பட பல ஆய்வுத் திட்டங்களை செயற்படுத்தும் முனைப்பிலும் இஸ்ரோ தீவிரம் காட்டி வருகிறது.

இதுதவிர பாரதிய அந்த ரிக்ஷா ஸ்டேஷன் எனும் இந்திய ஆய்வு விண்வெளி மையத்தையும் 2035-ம் ஆண்டுக்குள் விண்ணில் நிறுவ இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. அதற்கான முன்தயாரிப்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அதன் ஒருபகுதியாக ஸ்பேஸ் எக்ஸ் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த திட்டத்தின்படி விண்வெளியில் விண்கலன்களை ஒருங்கிணைக்கும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்காக தலா 400 கிலோ எடை கொண்ட சேசர் மற்றும் டார்கெட் எனும் 2 விண்கலன்களை இஸ்ரோ வழிகாட்டுதலில் தனியார் நிறுவனம் வடிவமைத்து உள்ளது.

இந்த இரட்டை விண்கலன்கள் பிஎஸ்எல்வி சி-60 ராக்கெட் வாயிலாக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இந்த மாத இறுதியில் இது ஏவப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த விண்கலன்கள் புவியில் இருந்து சுமார் 700 கி.மீ தூரம் கொண்ட வெவ்வேறு சுற்றுப்பாதைகளில் நிலை நிறுத்தப்பட உள்ளன. அதன்பின் அவற்றை ஒன்றிணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தற்போது ராக்கெட் பாகங்கள் ஒருங்கிணைப்பு, அதில் விண்கலன்களை பொருத்துதல் உள்ளிட்ட பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். திட்ட ஆய்வுக் குழுவின் ஒப்புதல் கிடைத்தவுடன் ஏவுதலுக்கான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட இருப்பதாக தகவல்கள் கிடைத்து உள்ளன.

# ‘ஊழியர்களுக்கு வாரம் 70 மணி நேரம் வேலை’ விளக்கமளிக்கும் நாரணயன மூர்த்தி!

ஊழியர்கள் வாரத்துக்கு 70 மணி நேரம் வரை ஜஒரு நாளைக்கு 14 மணி நேரம் வரைஸ வேலை செய்ய வேண்டும் என்று பிரபல ஐடி நிறுவனமான இன்போசிஸ் இணை நிறுவனரும் கோடீஸ்வரருமான நாராயண மூர்த்தி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ஒரு நாளைக்கு 8 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்வதே பல்வேறு உடல் மற்றும் மன ரீதியான நீண்டகால தாகத்தை ஏற்படுத்தும் என மருத்துவ ஆய்வுகள் சுட்டிக்காட்டும் நிலையில் நாராயண மூர்த்தியின் இந்த கருத்து கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

நிறுவனங்கள் இலாபம் ஈட்ட ஊழியர்களைக் கொத்தடிமைகளாக்க நாராயண மூர்த்தி வழி சொல்கிறார் என்று இணையவாசிகளும் ஐடி ஊழியர்களும் புலம்பித் தள்ளி வருகின்ற நிலையில் தற்போது அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தனது 70 மணி



நேர ஐடியாவுக்கு நாராயண மூர்த்தி விளக்கம் கூறியுள்ளார். மேற்கு வங்க மாநிலம் கல்கத்தாவில் நடந்த இந்திய வர்த்தக சபையின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியாவை முதல் இடத்திற்கு உயர்ந்த நமது இளைஞர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

இந்தியாவில் 800 மில்லியன் இந்தியர்கள் இலவச ரேஷன் அரிசி பெறுகிறார்கள், அப்படியென்றால் 800 மில்லியன் பேர் இன்னும் வறுமையில் இருக்கிறார்கள் என்று அர்த்தம். நமக்கு அதிகப் பொறுப்பு இருக்கிறது என்பதை இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதற்காகத்தான் நாம் அனைவரும் கடினமாக உழைக்க வேண்டும் எனவும் நமது நாடு இரக்கமுள்ள முதலாளித்துவமாக செயற்படுகிறது என்று இதன போது தெரிவித்தார்.

# மயோட்டா தீவை தாக்கிய புயல்..
## ஆயிரத்தைக்கடந்த இழப்பு எண்ணிக்கை!



இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள தீவு மயோட்டே. இந்தத் தீவு பிரான்சின் கட்டுப்பாட்டில் உள்ளது. சுமார் 3 லட்சத்து 20 ஆயிரம் பேரை மக்கள்தொகையாகக் கொண்டுள்ள மயோட்டே தீவை நேற்று சிண்டோ என்ற புயல் தாக்கியது.

கனமழையுடன் வீசிய இந்த புயலால் பல வீடுகள் சேதமடைந்தன. மின்கம்பங்கள், சாலைகள், கட்டிடங்கள் உள்பட பல்வேறு உட்கட்டமைப்புகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்த புயலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர் என்றும் 200-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்றும் முதற்கட்ட தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், மயோட்டே புயல் குறித்து பகீர் தகவல்கள் வெளியாகி உள்ளன. அதன்படி, ஏறக்குறைய ஒரு நூற்றாண்டில் மிக சக்திவாய்ந்த சூறாவளியாக மயோட்டே இருக்கும் என்று கூறப்படுகிறது. இதன் பாதிப்பில் சிக்கி பல நூறு பேரில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வரை உயிரிழந்திருக்கலாம் என்று உள்ளூர் பிரெஞ்சு அதிகாரி தெரிவித்தார்.

"உயிரிழந்தோர் எண்ணிக்கை நிச்சயமாக நூற்றுக்கணக்கானவர்கள் இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன், ஒருவேளை இந்த எண்ணிக்கை பல ஆயிரங்களை கூட கடக்கலாம்" என்று ஃபிரான்கோஸ் சேவியர் பெய்வில் கூறினார்.

அந்நாட்டு உள்துறை அமைச்சகம் கூறும் போது, "பாதிக்கப்பட்டவர்களை கணக்கெடுப்பது கடினமாகவே இருக்கும். தற்போதைய சூழலில் உறுதியான எண்ணிக்கையை கூற முடியாது," என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் இந்திய மாணவர்கள் கொலை மத்திய அரசு விடுத்துள்ள எச்சரிக்கை!




கனடாவில் இந்திய மாணவர்கள் 3 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வெறுப்பு குற்றம் காரணமாக இந்த சம்பவங்கள் நடைபெறுவதால், இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு கனடா ஆதரவு தெரிவித்து, இந்தியா மீது குற்றம் சுமத்தியதால் இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கனடா நாட்டு மக்கள் அல்லது காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு விசாக்கள் வழங்குவதை இந்தியா மறுக்கிறது என கனடா ஊடகத்தில் செய்தி வெளியாகின. இதன் காரணமாக ஏற்பட்ட வெறுப்பில் கனடாவில் 3 இந்திய மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் குறித்து வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் கூறியதாவது: கனடா ஊடகத்தில் வெளியாகும் செய்தி, இந்திய இறையாண்மை விஷயத்தில் வெளிநாட்டு தலையீடு போன்றது. இந்தியா பற்றி அவதூறு தகவல்களை கனடா ஊடகங்கள் தெரிவிப்பதற்கு இது மற்றொரு உதாரணம். இந்திய விசா வழங்குவது நமது இறையாண்மையுடன் தொடர்புடைய செயற்பாடு. இந்திய ஒற்றுமையை குறைத்து மதிப்பிடுபவர்களுக்கு விசா மறுப்பது எங்களின் சட்டப்பூர்வ உரிமை.

கனடாவில் இந்திய மாணவர்கள் 3 பேர் படுகொலை செய்யப்பட்டது கொடூரமான சோகம். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தேவையான உதவியை, கனடாவின் டொரன்டோ மற்றும் வான்கூவர் நகரங்களில் உள்ள இந்திய துணை தூதரகங்கள் செய்கின்றன. இந்த கொலை விசாரணை குறித்து உள்ளூர் காவல்துறை அதிகாரிகளுடன், இந்திய தூதரக அதிகாரிகள் தொடர்பில் உள்ளனர். கனடாவில் வெறுப்பு குற்றங்கள் அதிகரித்துள்ளதால், அங்குள்ள இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இவ்வாறு ரந்திர் ஜெய்ஸ்வால் கூறினார்.

## வங்கதேசத்தில் தேர்தல் நடைபெறுவது எப்போது? தலைமை ஆலோசகர் முகம்மது யூனுஸ் தகவல்!



வங்கதேசத்தில் இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் தேர்தல் நடைபெறலாம் என்று அந்நாட்டின் தலைமை ஆலோசகர் முகம்மது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான போரில் வெற்றி பெற்ற தினத்தை முன்னிட்டு தொலைக்காட்சியில் முகம்மது யூனுஸ் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர், "தேவையான சீர்திருத்தங்களை நிறைவேற்றிய பிறகு அடுத்த பொதுத் தேர்தலை 2025-ன் இறுதி அல்லது 2026-ன் முதல் பாதிக்குள் நடத்த முடியும். அனைத்து முக்கிய சீர்திருத்தங்களையும் முடித்துவிட்டு அதன் பிறகு தேர்தலை நடத்த அனைவரிடமும் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

தற்போது தேர்தல் சீர்திருத்த ஆணையம் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த ஆணையம் ஆகியவற்றின் பரிந்துரைகளை பொறுத்தே தேர்தலுக்கான காலக்கெடு அமையும். எனினும், அரசியல் கருத்தொற்றுமை காரணமாக, சிறிய அளவிலான சீர்திருத்தங்களுடன் குறைபாடற்ற வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தேர்தலை நடத்த வேண்டும் என்றால், 2025ம் ஆண்டின் இறுதியில் தேர்தலை நடத்துவது சாத்தியமாகும்.

இதேவேளை, எதிர்பார்க்கும் அளவுக்கு தேர்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பிறகு தேர்தல் நடத்தப்படலாம் என்றால் அதற்கு கூடுதலாக 6 மாதங்கள் ஆகலாம். ஏனெனில், தேர்தல் சீர்திருத்தங்களை முழு அளவில் மேற்கொள்ள வேண்டுமானால், தேர்தல் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகள் மற்றும் தேசிய ஒருமித்த கருத்துகளின் அடிப்படையிலேயே அதனை செய்ய முடியும்." என்று கூறியுள்ளார்.

முன்னதாக, பாகிஸ்தான் ஆக்கிரமிப்புப் படைகளிடம் இருந்து நாடு விடுவிக்கப்பட்ட 54வது வெற்றி தினத்தைக் குறிக்கும் வகையில், வங்கதேச அதிபர் முகமது சஹாபுதீன் இன்று டாக்காவின் புறநகர்ப் பகுதியில் உள்ள தேசிய நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து 1971 ஆம் ஆண்டு விடுதலைப் போர் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினார். மேலும், வங்கதேச தலைமை ஆலோசகர் முஹம்மது யூனுஸ் மற்றும் வங்கதேசத்திற்கு அரசுமுறைப் பயணமாக வருகை தந்துள்ள திமோர் அதிபர் ஜோஸ் ராமோஸ்-ஹோர்டா ஆகியோரும் தேசிய நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.



## பகல்நேர சேமிப்பு முறை இரத்து செய்ய டிரம்ப் உறுதி!

அமெரிக்காவில் கோடை காலத்தின்போது கிடைக்கும் பகல் நேரத்தை பயன்படுத்திக் கொள்ளும் வகையில், 'டேலைட் சேவிங்ஸ் டைம்' எனப்படும் பகல்நேர சேமிப்பு முறை நடைமுறையில் உள்ளது. இந்த முறையை இரத்து செய்யப் போவதாக, அந்த நாட்டின் அதிபராக தேர்வாகியுள்ள டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில், கோடை காலத்தின்போது கிடைக்கும் சூரிய வெளிச்ச காலத்தை பயன்படுத்திக் கொள்ளும் வகையில், பகல்நேர சேமிப்பு முறை நடைமுறையில் உள்ளது.

இதன்படி, மார்ச் மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையில் இருந்து, நவம்பரில் முதல் ஞாயிற்றுக்கிழமை வரை இது அமுலில் இருக்கும். இந்த காலத்தில், உள்ளூர் நேரப்படி காலை 2:00 மணிக்கு, ஒரு மணி நேரம் முன்னதாக கடிகாரங்களில் நேரம் மாற்றிக் கொள்ளப்படும். இதன் வாயிலாக இந்த காலகட்டத்தில் கிடைக்கும் பகல் நேரத்தை, அலுவலகம் மற்றும் தொழில் செய்வதற்கு பயன்படுத்த முடியும். இந்த நடைமுறைக்கு, குடியரசு கட்சி எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் அடுத்த மாதம், 20ம் திகதி அதிபராக பதவியேற்க உள்ள டொனால்டு டிரம்ப், 'இந்த நடைமுறை, மக்களுக்கு தேவையில்லாத நடைமுறை பிரச்னைகளை உருவாக்குவதுடன், செலவையும் அதிகரிக்கச் செய்கிறது என்கின்றார். அதனால், இந்த பகல்நேர சேமிப்பு முறையை இரத்து செய்ய, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்' என, சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா, வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களிலும்

அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்

கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட் டத்திலும் சில இடங்களில் 100 மி.மீ. அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்கு கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை, திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, தென் மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வங்காள விரிகுடா கடற்பரப்பில் மீன்பிடி உள்ளிட்ட நடவடிக்கையில் ஈடுபடுவோர் இந்த மண்டலம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிடும் முன்னறிவிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இடியுடன் கூடிய மழை வேளைகளில் ஏற்படும் தற்காலிகமான பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விலகியுள்ள நிலையில், புதிய சபாநாயகராகத் தமது கட்சியின் பொலனறுவை

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் ஜகத் விக்கிரமரத்னவை நியமிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி கட்சியின் பெரும்பாலான

நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நாளை நடைபெறவுள்ள சபாநாயகர் தெரிவின் போது, மருத்துவர் ஜகத் விக்கிரமரத்ன முன்மொழியப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, பொலனறுவை மாவட்டத்தில் போட்டியிட்ட மருத்துவர் ஜகத் விக்கிரமரத்ன 51 ஆயிரத்து 391 விருப்பு வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-04)



## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, மற்றும் அமைச்சர்கள் இலங்கை ஜனாதிபதியைக் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

அதன் பின்னர், ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவிற்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான இருதரப்பு கலந்துரையாடல் புதுடில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் உட்பட இருநாடுகளினதும் அயலுறவுத் துறைகளின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்வது குறித்தும், வர்த்தக வாணிப உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் பிராந்திய பாதுகாப்புத் தொடர்பான கரிசனை உட்பட முக்கிய விடயங்கள் குறித்து இரு நாடுகளின் தலைவர்களும் விரிவாகக் கலந்துரையாடியதாக இந்திய வெளியுறவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக நாளை 17 ஆம் திகதி வரை இந்தியாவில் பலரைச் சந்திக்கவிருக்கிறார்.

இன்றும், நாளையும் இந்தியாவில் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இன்று மாலை, இந்திய உப ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் மற்றும் நிதி மற்றும் நிறுவன விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன், சுகாதார அமைச்சர் ஜே. பி. நட்டா ஆகியோரையும், இன்றிரவு இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான ராஷ்டிரபதி பவனிலும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

மேலும், இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக, வாணிபத் துறை குறித்து விரிவாகக் கலந்துரையாடி, வர்த்தக முன்னெடுப்புகளை ஆரம்பிக்கும் நோக்கிலும், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து ஆராய்வதற்குமாக இந்தியாவில் உள்ள முன்னணி வர்த்தக, வாணிபப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களிலும் ஜனாதிபதி ஈடுபடவுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## வைத்தியசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலா ஒரு இலட்சம் ஷரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல யாழ். நீதிவான் நீதிமன்றம்

அனுமதித்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலைக்குள் கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் இ. அர்ச்சுனா மற்றும் சட்டத்தரணி கௌசல்யா ஆகியோர் அத்துமீறி உள் நுழைந்து வைத்தியர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கு இன்று திங்கட்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றம் சாட்டப்பட்ட மருத்துவர் இ.அர்ச்சுனா மற்றும் சட்டத்தரணி என். கௌசல்யா ஆகிய இருவரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

வழக்கு விசாரணையின்போது, வைத்திய சாலைக்குள் பணிப்பாளரின் அனுமதி இன்றி அத்துமீறி நுழைதல், முறைப்பாட்டாளருக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது எனச் சந்தேகநபர்களுக்கு அறிவுறுத்திய நீதிவான், சந்தேக நபர்களை ஷரூபா ஒரு இலட்சம் பெறுமதியான தனித்தனி ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார்.

குறித்த வழக்கை மேற்கொண்டு நடத்துவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்திய நீதிவான், வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)


## நீதி அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்துள்ளார். நாடாளுமன்ற இணை யத்தளத்தில் தனது பெயருக்கு முன்னால் கலாநிதி என்று குறிப்பிட்டதன் மூலம் தமக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் குறித்து ஆராயுமாறு கோரியே அவர் முறைப்பாட்டைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

தன்னை அவதூறு செய்யும் நோக்கில் யாராவது பொய் யான தகவல்களை பரப்புகிறார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதனாலேயே உண்மையைக் கண்டறியும் நோக்கில் தான், குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (ஐ - 05)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு



கொழும்பு, டிச. 16

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து, சிவில் விமான சேவைகள், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

விமான நிலைய வளாகத்தில் கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள பிரதான பிரச்சினையாக விமான நிலையத்திற்கு வரும் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் போதிய வசதிகளை செய்து கொடுக்க முடியாத நிலை உள்ளது.

ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக 2023 ஆம் ஆண்டில் முடிக்கப்பட வேண்டிய முக்கிய திட்டங்களை நிறைவு செய்யவில்லை.

நாட்டில் பல விமான நிலையங்கள் இருந்தாலும், சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படைக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மிகவும் முக்கியமானதாகும்.

இதன்காரணமாக, பயணிகளுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்கும், எதிர்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப சர்வதேச விமான நிலைய அமைப்புகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு கலந்துரையாடி விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.12.2024 இல் வெளியிடப்பெற்றது.